DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 373/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 10 P.W.8 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : R. மணிமாறன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ராஜு | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 17.04.2026.

**<u>எதிரிகள் ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் காவல் நிலையத்தில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 22.03.2017 ம் தேதி உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி காவல் ஆய்வாளராக பணியில் இருந்த சக்திவேல் என்பவர் முதற்கட்ட விசாரணை செய்த வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு இவ்வழக்கின் காயம்பட்ட மயில்சாமி மற்றும் பாக்கியலட்சுமி ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தமிழ்மணி அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்று சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **மயில்சாமி என்பவரின் காயச்சான்றிதழ் அசா.ஆ.5 என்றும் பாக்கியலட்சுமி என்பவரின் காயச்சான்றிதழ் அசா.ஆ.6 என்றும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 294(பி), 323, 506(1) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 1 ம் எதிரிக்கும் சாட்சிக்கும் ஏற்கனேவே பொலி தகராறு இருந்து சிவில் வழக்கு நிலுவையில் இருந்த விவரம் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தை அருகில் உள்ள நபர்களை சாட்சியாக விசாரித்தார்களா என்ற விவரம் தெரியாது என்றாலும் ஏற்கனவே விசாரிதத சாட்சிகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றாலும் சரிதான் . முதலில் இருந்த விசாரணை அதிகாரி விசாரித்த சாட்சிகளை நீங்கள் மறு விசாரணை செய்யவில்லை என்றால் ஆமாம்.
2. 2, 3 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் 1 ம் எதிரிக்கும் சாட்சிக்கும் ஏற்கனவே இருந்த முன் விரோதத்தின் காரணமாக சிவில் வழகது நிலுவையில் இருந்ததால் பொய்யான புகாரினை பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளிர்கள் என்றால் சரியல்ல.
3. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு போகாமலும் சான்று பொருட்களை பார்வையிடாமலும் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்கள் தயார் செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல்செய்துள்ளிர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.